ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1570/34 - 2008 ඔක්තෝබර් 10 වැනි සිකුරාදා - 2008.10.10
1570/34 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

24 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் வடறெக ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடனும் கொழும்பு பல்கலைக்கழக பேரவையின் ஒருப்பாட்டைப் பெற்றுக் கொண்டும் இக்கட்டளையின் மூலம் -

(அ) கமத்தொழில் மற்றும் கமத்தொழில் - தொழில் நுட்பவியலில் தற்போது ஈடுபட்டுள்ள ஆட்களுக்கிடையே கமத்தொழில் - தொழில் நுட்பவியல் மற்றும் கிராமிய அறிவியல்கள் கற்கை நெறிகள் பற்றிய உயர்கல்வியை வழங்கும், மேம்படுத்தும் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக உயர்கற்கை நிறுவகம் ஒன்றை மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2008.09.19 ஆந் திகதியிலிருந்து தாபிக்கின்றேன் ;

(ஆ) சொல்லப்பட்ட நிறுவகத்தை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கின்றேன் ;

(இ) அத்தகைய நிறுவகத்திற்கு "கமத்தொழில் - தொழில் நுட்பவியல் மற்றும் கிராமிய அறிவியலுக்கான நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்" என்னும் பெயரைக் குறித்தொதுக்கின்றேன்.

பேராசிரியர் வடறெக ஆராச்சிலாகே விஸ்வா வர்ணபால,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2008, செத்தெம்பர் 19.

10-700